**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 379** **நாள்: 12.11.2025**

**சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision) தொடர்பான கணக்கீட்டுப் படிவங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய அலைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி அறிவிப்பு 27.10.2025 முதல் அறிவிக்கப்பட்டு, அதன் செயலாக்கத்திற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக, வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கீட்டுப் படிவத்தினை (Enumeration Form) வீடுவீடாகச் சென்று வழங்குவது தொடர்பாக பயிற்சிகள் 28.10.2025 முதல் 03.11.2025 வரை வழங்கப்பட்டது.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று கணக்கீட்டுப் படிவம் (Enumeration Form) 04.11.2025 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து பெற்ற கணக்கீட்டுப் படிவங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய அலைபேசி செயலியில் (BLO App) பதிவேற்றம் செய்வது தொடர்பான பயிற்சி வகுப்புகள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி மேற்பார்வையாளர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் முன்னிலையில் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் இன்று (12.11.2025) நடைபெற்றது.

இந்த பயிற்சி வகுப்பில் வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய அலைபேசி செயலியில் எவ்வாறு பதிவேற்றம் செய்வது தொடர்பாக வீடியோ விளக்கக் காட்சி மூலம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி மேற்பார்வையாளர்களுக்கு செயல்முறை விளக்கம் அளித்து பயிற்சி வழங்கப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**